எம்.சி.ஓபி.எண் : 7348/2018 தேதி: 23/4/2024

மசா : 1

பெயர் : சுபாஷ்

த/பெயர் : மனோகரன்

வயது : 21

**<u>2ம் எதிர் மனுதாரரின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தின் போது நான் பொக்கிலின் லாரியை ஓட்டினேன் என்றால் சரிதான். பொக்கிலின் உரிமையாளர் பெயர் சுதாகரன் என்றால் சரிதான். பொக்கிலின் வண்டியின் பதிவு எண் JCP 205 ஆகும். அந்த பொக்கிலினை நான் லாரி மீது ஏற்றி வைத்திருந்தேன் என்றால் சரிதான். லாரியின் பதிவு எண் எனக்கு நியாபகம் இல்லை. அந்த லாரியின் உரிமையாளரும் மேற்படி சுதாகரன் தான். லாரியின் உரிமையாளர் சுதாகரன் என்பது நான் அவருக்கு கீழ் பணி செய்வதால் தெரியும். மேற்படி சுதாகரன் பொக்கிலினுக்கு உரிய காப்பீடு பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியும். நான் மேற்படி காப்பீடு ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பணி செய்யும் இடத்தில் தான் இந்த விபத்து நடந்தது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்களில் இந்த விபத்தானது சாலையில் நடந்ததாக குறிப்பிடவில்லை என்றாலும் நான் பணி செய்த இடத்தில் தான் நடந்தது என்று குறிப்பிட்டுள்ளமையாலும் இந்த விபத்திற்கான நஷ்ட ஈட்டை நான் Work men compensation act ல் தான் கோர இயலும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள காப்பீடு ஆவணத்தில் மசா ஆ14 ல் 3ம் தரப்பினருக்கு மட்டும் தான் காப்பீடு கிடைக்கதக்கது என்று கண்டுள்ளது என்றாலும் நான் 3ம் தரப்பினர் அல்ல பணியாளர் என்பதால் 2ம் எதிர் மனுதாரர் எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மசா ஆ14 ல் உள்ள லாரியின் பதிவு எண்ணும் எனது மனுவில் கண்டுள்ள பதிவு எண் வெவ்வேறானது என்றால் சரியல்ல. எனவே மனுவில் கண்ட லாரிக்கும் காப்பீடு சான்றிற்கும் சம்மந்தம் உள்ளது என்பதற்கு நான் எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல. TN 28 AH 3972 என்ற லாரிக்கு பர்மிட் இல்லாத காரணத்தினால் 2ம் எதிர் மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமந்தப்பட்ட புகாரை எனது தாயார் தான் கொடுத்தார் என்றால் சரிதான். அவர் இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை விபத்திற்கு பின் ஒரு மாதம் கழித்து தான் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். நான் மருத்துவமனையிலிருந்து ஒரு மாதம் கழித்து வந்தமையால் காலதாமதம் ஏற்பட்டது. நான் வேறு எந்த நீதிமன்றத்திலும் இந்த வழக்கிற்காக சாட்சியம் அளிக்கவில்லை. உமாசங்கர் கைது செய்து அவர் பெய்லில் வெளியே வந்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்மந்தமான இறுதி அறிக்கை வரைபடம் மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்தால் இந்த விபத்திற்கு காரணம் நான் தான் என்ற உண்மை தெரிந்து விடும் என்பதால் தான் அவைகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பொக்கிலினை மேலே ஏற்றும் போது பார்த்த இன்னொரு நபர் ஹரிகரன் ஆவார். அவர் வேலை செய்யும் நிலத்தின் உரிமையாளர் ஆவார். மசா ஆ12 ல் சுதாகரன் என்பவர் கொடுத்த சான்று நான் ஆபிஸ் அசிஸ்டன்ட் என்றும் 2 நாள் பணி செய்துள்ளேன் என்று குறிபிட்டுள்ளாரே தவிர நான் ஒரு பொக்கிலின் ஆப்ரேட்டர் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அதே மசா ஆ 12 ல் அசோக் கன்ஸ்டிரக்சன்ஸ் என்று கண்டுள்ளது சுதாகரன் என்பவருக்கு முன்னால் இருந்தார். விபத்தின் போது எனக்கு வயது 21 என்றால் சரிதான். மேற்படி சான்றில் நான் 5 வருடங்களாக ஆப்ரேட்டராக இருந்தாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். எனவே மேற்படி ஆவணம் ஏற்கத்தக்கது அல்ல என்றாலும் இந்த வழக்கிற்காக என்னால் தயார் செய்யபட்டது என்றாலும் சரியல்ல. எனக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 20,000/- சம்பளம் பெறுவதற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு மாத சம்பளம் அல்ல வார சம்பளம் தான். வேலையில்லாத போது எனக்கு கூலி இல்லை என்றால் சரிதான். சுதாகரன் என்பவர் நான் பணியில் இருப்பதால் அதற்கு தனியாக காப்பீடு ஏதும் வாங்கியுள்ளாரா என்றால் இல்லை. விபத்து

நடந்தவுடன் எனக்கு இடது காலை அப்புறப்படுத்தவில்லை சிறிது காலம் சிகிச்சை எடுத்த பின்பு தான் அப்புறப்படுத்தப்பட்டது. மசா ஆ5 ல் தள்ளுபடி போக ரூபாய் 1,55,000/- தான் செலுத்தப்பட வேண்டி இருந்தது என்றால் சரிதான். எனக்கு செயற்கை காலை பொறுத்துவதற்கு டிரஸ்ட் மூலமாக தான் பொறுத்தப்பட்டது என்றால் சரிதான். எனவே எனக்கு செயற்கை கால் பொறுத்தவதற்கான செலவு இல்லை என்றால் சரியல்ல. 2017 முதலாக நான் தொடர் சிகிச்சை ஆவணம் மற்றும் நுண்கதிர் படம் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களில் கையொப்பம் மற்றும் முத்திரை இல்லை என்றால் சரியல்ல. மசா ஆ8 ல் குறிப்பிட்டுள்ள லார்ஸ் அன்ட் டர்போ லிமிடெட் என்னை பணியில் நியமிக்கபட்டவர்கள் அல்ல என்றால் சரிதான். சுதாகரன் என்பவர் தான் மேற்படி வாகனத்தை வாடகைக்கு கொடுப்பார். நான் தாக்கல் செய்துள்ள மசா ஆ11 ஓட்டுநர் உரிமமத்தில் கனரக வாகனம் ஓட்டுவதற்கான குறிப்பு இல்லை என்றால் சரிதான். ஆனால் மேற்படி பொக்கிலின் கனரக வாகனம் அல்ல. நான் எனது கல்வியை 2014 வருடமே நிறுத்தி இருந்தேன் என்றால் சரிதான். பொக்கிலின் ஏற்றும் போது நான் கவனகுறைவால் இருந்தமையால் தான் அந்த பொக்கிலின் என் மீது விழுந்து இந்த விபத்து ஏற்பட்டதே தவிர லாரி ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல. பொக்கிலின் க்கு தகுந்த இன்சுரன்ஸ் இல்லாத காரணத்தினால் தான் நான் லாரியின் மீது இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொகிலினும் லாரியும் ஒரே உரிமையாளருக்கு உரியதாகும். நஷ்ட ஈட்டை 1ம் எதிர் மனுதாரிடம் தான் பெறவேண்டும் என்றாலும் 2ம் எதிர் மனுதாரிடம் பெற இயலாது என்றாலும் சரியல்ல. என்னிடம் போலீஸ்சார் வாக்குமூலம் பெற்றார்கள். எனது தாயார் போலீஸ்சில் புகார் கொடுத்தமையால் உண்மை விவரங்களை மறைத்து எனக்கு சாதகமாக லாரியின் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் ஊனமுற்றோர்கான அரசு பென்சன் பெற்றுக் கொண்டு தான் உள்ளேன். நான் பல தலைப்புகளில் கோரியுள்ள நஷ்ட ஈட அதிகம் என்றாலும் அதற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இது சாலை விபத்து கிடையாது என்பதால் இந்த

நீதிமன்றத்தில் இந்த வழக்கை தொடர எனக்கு எந்த முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.